## தலைப்புச் செய்திகள்

- நாக்பூர் சர்வதேச விமான நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மேற்காசியாவில் நிலவும் சூழல் காரணமாக பல்வேறு நாடுகளுக்கான விமான சேவையை ஏர்-இண்டியா நிறுவனம் ரத்து செய்துள்ளது.
- தமிழக அரசின் நீண்ட நாள் கோரிக்கையான, நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
- கடல்சார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென இந்தியாவும் ஓமனும் முடிவு செய்துள்ளன.
- இஸ்தான்புல் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Payas Jain காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

நாக்பூர் சர்வதேச விமான நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், நீண்டகால உரிமம் அடிப்படையில் தனியார் பங்களிப்புடன் இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

குஜராத் மாநிலம், அஹமதாபாத் - Dholera இடையே இரட்டை ரயில்பாதை அமைக்கும் திட்டத்திற்கு இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

20 ஆயிரத்து 667 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் முதலாவது மித அதிவிரைவு ரயில்சேவையை வழங்குவதற்கு ஏதுவாக இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>>><<<<<<

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் செயலாக்கம் குறித்து, நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர் லாலுடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்ற இரு துறையினரும் ஒருங்கிணைந்து செயலாற்றுவது என்று இந்த ஆலோசனையின் போது தீர்மானிக்கப்பட்டதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

மேற்காசியாவில் நிலவும் சூழலை கருத்தில் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்த 7 வேண்டுகோள்களை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுபோன்ற சவாலான சூழ்நிலையில், அரசு நிர்வாகமும் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியமாகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் வேண்டுகோள் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொண்ட பின்னர், தமது அரசு செயல்திட்டம் ஒன்றை வெளியிடும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த 2 முதல் 3 நாட்களுக்குள் இந்த செயல்திட்டம் வெளியிடப்படும் என்றும் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஏர் இண்டியா நிறுவனம், வெளிநாடுகளுக்கான பல்வெறு சேவைகளை குறைப்பதென முடிவு செய்துள்ளது.

விமான எரிபொருள் விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களை கருத்தில் கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஏர் இண்டியா நிறுவனத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தில்லி - சிகாகோ, மும்பை - நியூயார்க், தில்லி - ஷாங்காய், சென்னை - சிங்கப்பூர் இடையேயான விமான சேவைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

அஹமதாபாத் – திருச்சி இடையே இயக்கப்பட்டு வந்த சிறப்பு ரயில், வழக்கமான சேவையாக மாற்றப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்திற்கும், குஜராத் மாநிலம் அஹமதாபாதிற்கும் இடையே பல்வேறு மாநிலங்களை இணைக்கும் வகையிலான இந்த ரயில் சேவை, தொழில்துறையின் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ்-க்கும் தமிழக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக டாக்டர் எல். முருகன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

சிபிஎஸ்ஈ 12ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

திருவனந்தபுரம் மண்டலம், 95 புள்ளி ஆறு இரண்டு சதவீத தேர்ச்சியுடன் முதலிடத்தை பிடித்தது.

93 புள்ளி எட்டு நான்கு சதவீத தேர்ச்சியுடன் சென்னை மண்டலம் இரண்டாவது இடத்தையும், 93 புள்ளி ஒன்று ஒன்பது சதவீத தேர்ச்சியுடன் பெங்களூரு மண்டலம் 3வது இடத்தையும் பிடித்தன.

>>>>>><<<<<<

மத்தியப்பிரதேசத்தில் மகளிருக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 31வது தவணையை அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் இன்று விடுவித்தார்.

நரசிங்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட *Mungwani* கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆயிரத்து 835 கோடி ரூபாய், ஒரு கோடியே 25 லட்சம் பெண்களின் வங்கிக் கணக்கில் விடுவிக்கப்பட்டதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இது ஆயிரத்து 500 ரூபாயாக விடுவிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 55 ஆயிரத்து 920 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பஞ்சாபில் மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் ஆம் ஆத்மி அரசு செயல்படுவதாக அம்மாநில பிஜேபி தலைவர் திரு. *Sunil Jakhar* குற்றம் சாட்டியுள்ளார்.

சண்டிகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு மற்றும் நிலுவைத் தொகையை ஆம் ஆத்மி அரசு வழங்காதது ஏன் என்று வினவினார்.

அரசு ஊழியர்களின் நலனுக்கு எதிராக ஆம் ஆத்மி அரசு செயல்படுவதாகவும் திரு. *Sunil Jakhar* குறை கூறினார்.

>>>>>><<<<<<

தமிழக அரசின் நீண்ட நாள் கோரிக்கையான, நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வினாத்தாள் கசிந்த விவகாரம் தொடர்பாக, தற்போது நடந்து முடிந்த நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மருத்துவ படிப்புகளுக்கு மாநில ஒதுக்கீட்டின் கீழ் உள்ள அனைத்து இடங்களையும், 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மாநிலங்களே நிரப்ப அனுமதிக்க வேண்டும் என்றும் திரு. விஜய் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

நீட் வினாத்தாள் முறைகேடு தொடர்பாக, 5 பேரை சிபிஐ கைது செய்துள்ளது.

இதுதொடர்பாக, நாடுமுழுவதும் பல்வேறு இடங்களில் மேற்கொண்ட சோதனை அடிப்படையில் சிபிஐ இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 3 பேர் ஜெய்ப்பூரை சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் நாசிக்கையும், மற்றொருவர் குர்கிராமையும் சேர்ந்தவர் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ஓமனுடனான கடல்சார் ஒத்துழைப்பு மேலும் மேம்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

ஓமன் நாட்டின் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. *Saiad Bin Hamoud Al Maawali*-யுடன் காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஓமன் துறைமுகங்களை விரிவுபடுத்துவதற்கான பணிகளில் இந்தியா பங்கேற்பது குறித்தும் இந்த பேச்சுக்களின் போது விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மேற்குவங்கத்தில் உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகள் மற்றும் பழங்களை பிற மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அம்மாநில அரசு நீக்கியுள்ளது.

உருளை விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மேற்குவங்க அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

முந்தைய திரிணமூல் காங்கிரஸ் அரசு பிறப்பித்த இந்த தடை உத்தரவை நீக்கியதன் மூலம், விவசாயிகள் முழு அளவில் பயனடைவார்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர், நகராட்சி நிர்வாகம் மற்றும் கூட்டுறவுத்துறை நியமன முறைகேடு குறித்த வழக்குகளை சிபிஐ விசாரணைக்கு மாற்றவும் மேற்குவங்க அரசு அனுமதி அளித்துள்ளதாக மற்றொரு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

*Kishtwar* மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக காவல்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வெளிநாட்டு தீவிரவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டதாக கூறி இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இஸ்தான்புல்லில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Payas Jain* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 11-12, 12-14, 11-9, 11-9 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் *Kay Stumper*-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Shriyanshi Valishetty* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-14, 21-18 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் *Yu Chen Han*-ஐ வென்றார்.

ஆடவர் பிரிவில், *Meiraba Luwang Maisnam, Ginpaul Sonna, Tushar Suveer, Manraj Singh* ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்து வீச்சுப் பிரிவில் இந்தியாவின் பும்ரா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

பேட்டிங் பிரிவில் *Yashasvi Jaiswal* 8வது இடத்திலும், *Shubman Gill* 9-வது இடத்திலும் உள்ளனர்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஹாக்கி போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

ஆசிய பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Gyaneshwari Yadav* ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>>END<<<<<<